# தமிழ்நாடு தகவல் ஆணையம்

**எண்.19, அரசு பண்ணை இல்லம், பேர்ன்பேட்டை,** (Pension Pay Office **பின்புறம்**),

**நந்தனம், சென்னை– 600 035.** தொலைபேசி எண். 044-29515590


## ஆணை நாள் 05.05.2026

**முன்னிலை**

**திரு.பி.தாமரைக் கண்ணன், இ.கா.ப.(ஓய்வு),**

**மாநில தகவல் ஆணையர்**

*****

**திருவாரூர் மாவட்டம்:**

**மனுதாரர் திரு பா.சீனிவாசன்**

(1) SA 4832/விசாரணை/E/2023 (2) SA 17333/விசாரணை/E/2023
(3) SA 21747/விசாரணை/E/2023 (4) SA 21748/விசாரணை/E/2023
(5) SA 15005/விசாரணை/E/2024 (6) SA 12731/விசாரணை/E/2024
(7) SA 16462/விசாரணை/E/2024 (8) SA 9563/விசாரணை/E/2024
(9) SA 12034/விசாரணை/E/2024 (10) SA 14253/விசாரணை/E/2024
(11) SA 1829/விசாரணை/E/2025 (12) SA 5614/விசாரணை/E/2025
(13) SA 17026/விசாரணை/E/2025 (14) CP 734/விசாரணை/E/2023
(15) SA 651/விசாரணை/E/2023 (16) CP 1159/விசாரணை/E/2023

**மனுதாரர் திரு கோ.சரவணன்**

(1) SA 17322/விசாரணை/E/2023 (2) SA 20867/விசாரணை/E/2023
(3) CP 4027/விசாரணை/E/2023 (4) SA 7273/விசாரணை/E/2024
(5) SA 6998/விசாரணை/E/2024 (6) SA 16463/விசாரணை/E/2024
(7) SA 21746/விசாரணை/E/2023 (8) SA 4202/விசாரணை/E/2024 (9) SA 146/விசாரணை/E/2024

திரு பா.சீனிவாசன் .. மேல்முறையீட்டாளர்கள்
திரு கோ.சரவணன்

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர்/ .. பொது அதிகார அமைப்பு
நிர்வாக அலுவலர், மாவட்ட சுகாதார அலுவலகம்,
திருவாரூர் மாவட்டம்

பொதுத் தகவல் அலுவலர்/ நிர்வாக அலுவலர்,
மாவட்ட சுகாதார அலுவலகம்,
கடலூர் மாவட்டம்

## ஆணை

1) மனுதாரர்கள் திரு பா சீனிவாசன் மற்றும் திரு கோ.சரவணன் ஆகியோர் தகவல் அறியும் உரிமைச் சட்டம், பிரிவு 6(1) மற்றும் 19(1) ஆகிய பிரிவுகளின் கீழ் திருவாரூர் மற்றும் கடலூர் மாவட்ட சுகாதார அலுவலகங்களின் பொதுத் தகவல் அலுவலர்களுக்கு அனுப்பிய மனுக்கள், இவ்வாணையத்திற்கு அனுப்பியுள்ள மேல்முறையீட்டு மற்றும் புகார் மனுக்கள் மற்றும் அவை தொடர்பாக அவர்கள் அனுப்பியுள்ள கடிதங்கள் தொடர்பான 29 வழக்குகள் குறித்த விசாரணை இவ்வாணையத்தில் 12.03.2026 அன்று நடைபெற்றது.

2) அவற்றில், (1) SA 1376/E/2020 (2) SA 5448/E/2024 (3) SA 14484/E/2024 (4) SA 1830/E/2025) ஆகிய 4 வழக்குகள் தொடர்பாக பொதுத் தகவல் அலுவலர்களால் வழங்கப்பட்ட தகவல்களை 12.03.2026 அன்று பெற்றுக் கொண்ட, மனுதாரர்களில் ஒருவரான திரு கோ.சரவணன், தான் கோரிய தகவல்களை பெற்றுக் கொண்டு மனநிறைவு அடைவதாக ஆணையத்திற்கு கடிதம் வழங்கியுள்ளார்.

3) மீதமுள்ள 25 வழக்குகளை பொறுத்தவரையில், மனுதாரர் திரு பா சீனிவாசனின் சகோதரர் திரு கோ. சரவணன் மேற்படி 25 வழக்கு எண்களையும் குறிப்பிட்டு, "எனது சகோதரர் பா.சீனிவாசன் என்பவர் மீது திருவாரூர் மாவட்ட சுகாதார அலுவலகத்தில் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது குறித்த தமிழ்நாடு தகவல் ஆணைய வழக்கு தொடர்புடைய அனைத்து ஆவணங்களையும், திருவாரூர் மற்றும் கடலூர் மாவட்ட சுகாதார அலுவலகங்களுக்கு நேரில் பார்வையிட்டு, தேவையான ஆவணங்களின் நகல்களை பெற்று கொள்வதற்கு அனுமதியளிக்க உத்தரவிடுமாறு கேட்டுக் கொள்ளும் எழுத்துமூலமான கடிதத்தை ஆணையத்தில் சமர்ப்பித்தார்.

4) விசாரணையின் முடிவில், மனுதாரரின் வேண்டுகோளை ஆணையம் ஏற்று, ஆவணங்களை பார்வையிட்டு களஆய்வு செய்ய மனுதாரர்களை அனுமதிக்குமாறும், பின்னர் அது குறித்து இவ்வாணயத்தில் அறிக்கை சமர்ப்பிக்குமாறும், திருவாரூர் மற்றும் கடலூர் மாவட்ட சுகாதார அலுவலக நிர்வாக அலுவலர்களுக்கு ஆணையம் உத்தரவிட்டது.

5) அதனை தொடர்ந்து, திருவாரூர் மாவட்ட சுகாதார அலுவலக நிர்வாக அலுவலர் திரு இரா.இரவிச்சந்திரன் மற்றும் கடலூர் மாவட்ட சுகாதார அலுவலக நிர்வாக அலுவலர் திரு ஆ.பெஞ்சமின் ஆகியோர் ஆணையத்தில் 20.04.2026 அன்று ஆஜராகி அறிக்கை சமர்ப்பித்தனர்.

6) கடலூர் மாவட்ட சுகாதார அலுவலக நிர்வாக அலுவலர் 15.04.2026 தேதியிட்டு சமர்ப்பித்த அறிக்கையில், ஆணையத்தின் உத்தரவுபடி 23.03.2026, 24.03.2026 மற்றும் 25.03.2026 ஆகிய தேதிகளில் ஆவணங்களை பார்வையிட வருமாறு 13.03.2026 நாளிட்ட அழைப்பாணையின் வாயிலாக மனுதாரருக்கு தெரிவிக்கப்பட்டது என்றும், ஆனால், மனுதாரர் மேற்படி தேதிகளில் ஆவணங்களை பார்வையிட வரவில்லை என்றும், அதற்கு பதிலாக அவர் 20.03.2026 நாளிட்டு அனுப்பியுள்ள கடிதத்தில், தனக்கு மேற்படி வழக்குகள் குறித்த தகல்கள் தேவையில்லை என்றும், ஆகவே அவை தொடர்பாக மேல்நடவடிக்கை ஏதும் மேற்கொள்ள வேண்டாம் என்றும் கேட்டுக் கொண்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டு, அக்கடிதத்தின் நகலும் ஆணையத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

7) திருவாரூர் மாவட்ட சுகாதார அலுவலக நிர்வாக அலுவலர் 15.04.2026 தேதியிட்டு சமர்ப்பித்த அறிக்கையில், ஆணையத்தின் உத்தரவுபடி 06.04.2026, 07.04.2026 மற்றும் 08.04.2026, ஆகிய தேதிகளில் ஆவணங்களை பார்வையிட வருமாறு 25.03.2026 நாளிட்ட அழைப்பாணையின் வாயிலாக மனுதாரர் திரு பி.சீனிவாசனுக்கு தெரிவிக்கப்பட்டது என்றும், அதன்படி அவர் 07.04.2026 அன்று திருவாரூர் மாவட்ட சுகாதார அலுவலகம் வந்து

கோப்புக்களை பார்வையிட்டார் என்றும், பின்னர் அவர் கோரிய ஆவணங்களின் (42 பக்கங்கள்) நகல்கள் அவருக்கு வழங்கப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

8) மேலும், மனுதாரர் திரு சீனிவாசன், ஆணையத்திற்கு 07.04.2026 நாளிட்டு எழுதியுள்ள கடிதத்தில், தான், 07.04.2026 அன்று 12 வழக்குகள் குறித்த ஆவணங்கள், கோப்புக்கள் மற்றும் பதிவேடுகள் ஆகியவற்றை சட்டப்பிரிவு 2(j)-ன் படி நேரில் பார்வையிட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

9) இந்நிலையில், வழங்கப்பட்ட ஆவணங்களை பரிசீலித்த இவ்வாணையம் கீழ்க்கண்டவற்றை பதிவு செய்கிறது:-

i. மனுதாரர் திரு பா.சீனிவாசன் கடலூர் மாவட்ட சுகாதார அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக 03.02.1985 அன்று பணியில் சேர்ந்து, பின்னர் திருவாரூர் மாவட்டத்திற்கு பணிமாறுதல் செய்யப்பட்டுள்ளார். கடந்த 01.03.1985 முதன் முன்னறிவிப்பின்றி நீண்ட காலம் பணிக்கு வரவில்லை என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் அவர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு 27.05.2002 அன்று பணியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார்.

ii. மனுதாரர்கள் திரு பா சீனிவாசன் மற்றும் திரு கோ.சரவணன் ஆகியோர் மேலே குறிப்பிடப்பட்ட இந்தப் பொருளை அடிப்படையாக கொண்டுதான், கடலூர் மற்றும் திருவாரூர் மாவட்ட சுகாதார அலுவலக பொதுத் தகவல் அலுவலர்கள், சென்னை, பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத் துறை மற்றும் இவ்வாணையத்திற்கு தொடர்ந்து மனுக்களை அனுப்பி வந்துள்ளனர்.

iii. மேற்குறிப்பிடப்பட்டுள்ள 29 மனுக்களை தவிர, இதே பொருள் குறித்து கடந்த காலத்தில் கீழ்க்கண்ட 11 மேற்முறையீட்டு மனுக்களையும் மனுதாரர்கள் ஆணையத்திற்கு அனுப்பியுள்ளனர்:-

**1. SA 237/E/2022**
**2. SA 11512/E/2022**
**3. SA 13912/E/2022**
**4. SA 14218/E/2022**
**5. SA 15809/E/2022**
**6. SA 20299\E/2022**
**7. SA 20300\E/2022**
**8. SA 22253\E/2022**
**(9) SA 17323\E/2023**
**(10) SA 1688\E/2024**
**(11) SA 2410\E/2024**

iv. மனுதாரர்கள் ஒரே பொருள் குறித்து இதுவரை அனுப்பியுள்ள பல்வேறு மனுக்களில் கோரிய தகவல்கள் தொடர்பாக இவ்வாணையம், பல்வேறு தேதிகளில் விசாரணைகளை மேற்கொண்டு, சம்மந்தப்பட்ட பொதுத் தகவல் மற்றும் மேல்முறையீட்டு அலுவலர்களை இவ்வாணையம் விரிவான முறையில் விசாரித்து, உரிய ஆணைகளை வழங்கியுள்ளதன் அடிப்படையில், மேற்படி மனுதாரர்கள் கோரிய தகவல்கள் தொடர்பாக, பொது அதிகார அமைப்பின் பராமரிப்பில் உள்ள ஆவணங்கள் அனைத்தும் பொதுத் தகவல் அலுவலர்களால் வழங்கப்பட்டுள்ளது.

v. பல வழக்குகளில், பொதுத் தகவல் அலுவலர்கள் தாமதமாக தகவல் வழங்கி மனுதாரருக்கு மனஉளைச்சல் ஏற்படுத்தியதற்காக மனுதாரருக்கு நஷ்டஈடு வழங்கியுள்ளதோடு, சம்மந்தப்பட்ட பொதுத் தகவல் அலுவலர்களிடம் விளக்கம் கோரி, எச்சரிக்கை நமூனாவும் சார்வு செய்யப்பட்டுள்ளது

vi. மேலும், இவ்வாணையத்தின் உத்தரவுக்கிணங்க பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத் துறையின் இணை இயக்குநர் (நிர்வாகம்) திரு சீ.பாலசுப்பரமணியன் அவர்கள் 12.09.2024 அன்று திருவாரூர் மற்றும் கடலூர் மாவட்ட சுகாதார அலுவலகங்களுக்கு நேரில் சென்று, அங்குள்ள ஆவணங்கள், கட்டடங்கள் ஆகியவற்றை ஆய்வு செய்துள்ளதோடு, முன்னாள் / இந்நாள் பொதுத் தகவல் அலுவலர்களாக இருந்த 8 அலுவலர்களிடம் விரிவான விசாரணையையும் மேற்கொண்டு, மனுதாரர் கோரும் தகவல் தொடர்பாக மனுதாரருக்கு வழங்கப்பட்டுள்ள ஆவணங்கள் தவிர்த்து, வேறு எந்த ஆவணமும் பொது அதிகார அமைப்பில் இல்லை என்பதை உறுதி செய்து அறிக்கை அளித்துள்ளார்.

vii. மனுதாரர் இப்பிரச்சினை தொடர்பாக மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடுத்த ரிட் மனுவை மனுதாரரே திரும்பப் பெற்றுள்ளார். (தீர்ப்புரையின் நகல் ஆணையத்தில் பொதுத் தகவல் அலுவலரால் சமர்ப்பிக்கப்பட்டது) அதேபோல, தனது பணி நீக்கத்தை எதிர்த்து மனுதாரர் 12.11.2006 அன்று அனுப்பிய மேல்முறையீட்டு மனுவை, பரிசீலித்த சென்னை, பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து துறை இயக்குனர் மேற்படி மனுவை தள்ளுபடி செய்துள்ளார்.

viii. இதற்கிடையே, மனுதாரர் திரு சரவணன் 20.03.2026 தேதியிட்டும், மனுதாரர் திரு சீனிவாசன் 31.03.2026 மற்றும் 12.04.2026 ஆகிய தேதிகளிலும் இவ்வாணையத்திற்கு கடிதங்களை அனுப்பியுள்ளனர். அவற்றில், ஏற்கனவே தெரிவித்தபடி, "பொதுத் தகவல் அலுவலர், தீய எண்ணத்துடன் கேட்டுள்ள தகவல்களை அளிக்க மறுத்துள்ளார்" என்று தெரிவித்துள்ளனர்.

10) பொதுத் தகவல் அலுவலர் தாக்கல் செய்த ஆவணங்கள், மனுதாரர் இதே பொருள் குறித்து ஏற்கனவே இவ்வாணையத்திற்கு அனுப்பியுள்ள பல்வேறு மேல்முறையீட்டு / புகார் / ஆணை நிறைவேற்றப்படாமை மனுக்கள், அவற்றின் மீது இவ்வாணையத்தால் விசாரணை நடத்தப்பட்டு பிறப்பிக்கப்பட்ட உத்தரவுகள், அவை நிறைவேற்றப்பட்டு, பொதுத் தகவல் அலுவலர்களால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகள் ஆகியவற்றை பரிசீலித்த ஆணையம், கீழ்க்கண்ட உத்தரவை பிறப்பிக்கிறது:-

i. கடலூர் மாவட்ட சுகாதார அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்த மனுதாரர் திரு பா.சீனிவாசன் 27.05.2002 அன்று பணியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார். இப்பொருள் குறித்தே மனுதாரர்கள் திரு சரவணன் (திரு சீனிவாசனின் சகோதரர்) மற்றும் திரு சீனிவாசன் ஆகியோர் தொடர்ந்து கடலூர் மற்றும் திருவாரூர் மாவட்ட சுகாதார அலுவலக பொதுத் தகவல் அலுவலர்கள், சென்னை, பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத் துறை மற்றும் இவ்வாணையத்திற்கு தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் மனுக்களை அனுப்பி வருகின்றனர்.

ii. அவை குறித்து, இவ்வாணையம் உரிய விசாரணைகளை மேற்கொண்டு, சம்மந்தப்பட்ட பொதுத் தகவல் அலுவலர்களுக்கு உரிய உத்தரவுகளை பிறப்பித்துள்ளது. அதன் அடிப்படையில், பொது அதிகார அமைப்புக்களின் பராமரிப்பில் உள்ள அனைத்து ஆவணங்களும் மனுதாரர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. மேலும்,

இவ்வாணையத்தின் உத்தரவுக்கிணங்க பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத் துறையின் இணை இயக்குநர் (நிர்வாகம்) திரு சீ.பாலசுப்பரமணியன் அவர்கள் 12.09.2024 அன்று திருவாரூர் மற்றும் கடலூர் மாவட்ட சுகாதார அலுவலகங்களுக்கு நேரில் சென்று, விரிவான விசாரணை மேற்கொண்டு, மனுதாரர் கோரும் தகவல்கள் தொடர்பாக மனுதாரருக்கு வழங்கப்பட்ட ஆவணங்கள் தவிர்த்து, வேறு எந்த ஆவணமும் பொது அதிகார அமைப்பில் இல்லை என்பதை உறுதி செய்து அறிக்கை அளித்துள்ளார்.

iii. இவ்வளவுக்கு பிறகும், மனுதாரர்கள் திரு பா.சீனிவாசன் மற்றும் திரு கோ.சரவணன் ஆகியோர் திருப்தியடையாமல் தொடர்ந்து பல்வேறு மனுக்களை அனுப்பி தகவல்கள் கோரி வந்த நிலையில், அவர்கள் அனுப்பிய 29 மனுக்கள் மீது இவ்வாணையத்தில், 12.03.2026 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டது. அதில், 4 வழக்குகளில், மனுதாரர்கள் கோரிய தகவல்களை பொதுத் தகவல் அலுவலர்கள் ஆணையத்தின் முன்பாக மனுதாரர் திரு சரவணனுக்கு வழங்கியதையடுத்து, அவரும் அவற்றை பெற்றுக் கொண்டு மனநிறைவு அடைவதாக ஆணையத்திற்கு கடிதம் வழங்கினார்.

iv. மீதமுள்ள 25 வழக்குகளை பொறுத்தவரையில், மனுதாரர்கள் திருவாரூர் மற்றும் கடலூர் மாவட்ட சுகாதார அலுவலகங்களுக்கு நேரில் சென்று ஆவணங்களை பார்வையிட்டு அவர்களுக்கு வேண்டிய ஆவணங்களை பெற்றுக் கொள்ள வேண்டுமென்று ஆணையம் உத்தரவு பிறப்பித்திருந்தது. அதனை தொடர்ந்து, மனுதாரர் திரு சீனிவாசன் 20.03.2026 நாளிட்டு அனுப்பியுள்ள கடிதத்தில், தனக்கு மேற்படி வழக்குகள் குறித்த தகல்கள் தேவையில்லை என்றும், ஆகவே அவை தொடர்பாக மேல்நடவடிக்கை ஏதும் மேற்கொள்ள வேண்டாம் என்றும் கேட்டுக் கொண்டுள்ளார். திருவாரூர் மாவட்டத்தை பொறுத்தவரையில், மனுதாரர் திரு சீனிவாசன் 07.04.2026 அன்று மாவட்ட சுகாதார அலுவலகம் சென்று ஆவணங்களை பார்வையிட்டு, 42 பக்கங்கள் கொண்ட ஆவணங்களின் நகல்களை பெற்றுச் சென்றுள்ளதாக பொதுத் தகவல் அலுவலர் அறிக்கை சமர்ப்பித்துள்ளார்.

இந்நிலையில்

a) **மனுதாரர்கள் ஒரே பொருள் குறித்து அனுப்பியுள்ள நாற்பதற்கும் மேற்பட்ட மனுக்கள் தொடர்பாக, பொது அதிகார அமைப்புக்களின் பராமரிப்பில் உள்ள அனைத்து ஆவணங்களும் வழங்கப்பட்டுவிட்டன. சில வழக்குகளில் மனுதாரர்களுக்கு நஷ்டஈடும் வழங்கப்பட்டுள்ளன. உரிய காலத்தில் தகவல் வழங்காத பொதுத் தகவல் அலுவலர்களிடம் விளக்கம் கோரி பெற்று அவர்களுக்கு எச்சரிக்கை நமூனாக்களும் வழங்கப்பட்டுள்ளன. இதன் பின்னரும், ஒரே பொருள் குறித்து, தொடர்ந்து வெவ்வேறு தகவல்களை, பல்வேறு பொது அதிகார அமைப்புக்களிடமிருந்து மனுதாரர்கள் கோரி வருகின்றனர் என்பதை ஆணையம் பதிவு செய்கிறது.**

b) **மனுதாரர் திரு பா.சீனிவாசன் கடலூர் மாவட்ட சுகாதார அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக 03.02.1985 அன்று பணியில் சேர்ந்து, கடந்த 01.03.1985 முதன் முன்னறிவிப்பின்றி நீண்ட காலம் பணிக்கு வரவில்லை என்ற குற்றச்சாட்டின்**

அடிப்படையில் அவர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு **27.05.2002** அன்று பணியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார். தனது பணி நீக்கத்தை எதிர்த்து மனுதாரர் 12.11.2006 அன்று அனுப்பிய மேல்முறையீட்டு மனுவை, பரிசீலித்த சென்னை, பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து துறை இயக்குனர் அம்மனுவை தள்ளுபடி செய்துள்ளார். தனது பணிநீக்கத்தை எதிர்த்து, 2004-ம் ஆண்டு, மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் மனுதாரர் தொடுத்த ரிட் மனுவை மனுதாரரே திரும்ப பெற்றுக் கொண்டுள்ளார். தன்னை பணிநீக்கம் செய்தது முறையற்ற செயல் என்று மனுதாரர் கருதுவாரானால் அது குறித்து துறைரீதியான அல்லது சட்டப்பூர்வமான வழிமுறைகளை கையாண்டுதான் அவர் நிவாரணம் தேட முற்பட வேண்டும். அதற்கு பதிலாக, அரசின் பல்வேறு பொது அதிகார அமைப்புக்களுக்கு தொடர்ச்சியாக மனுக்களை அனுப்புவது, அரசுத் துறை அதிகாரிகளின் நேரத்தை வீணடிக்கும் செயல் என்பதையும், பொதுத் தகவல் அலுவலர் சுட்டிக்காட்டியுள்ளதைப்போல, மனஉளைச்சல் ஏற்படுத்தும் செயல் என்பதையும் ஆணையம் பதிவு செய்கிறது. மேலும், பொதுத் தகவல் அலுவலர்களிடமிருந்து பல்வேறு தகவல்களை பெற்றுக் கொண்டுவிட்ட பின்னரும், அவர்கள் “தீய எண்ணத்துடன் தான் கோரிய தகவல்களை அளிக்க மறுக்கிறார்கள்” என்றும் மனுதாரர் ஆணையத்திற்கு கடிதம் மூலம் தெரிவித்துள்ளார். மனுதாரர்களின் மேற்படி வாதுரைகளை ஆணையம் நிராகரித்து, இந்த 25 வழக்குகளையும் (22 மேல்முறையீட்டு மனுக்கள் மற்றும் 3 புகார் மனுக்கள்) முற்றாக்கம் செய்து ஆணையம் உத்தரவிடுகிறது.

**ஒம்/- (பி.தாமரைக் கண்ணன்)**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண்கள்**

(1) SA 4832/விசாரணை/E/2023 (2) SA 17333/விசாரணை/E/2023 (3) SA 21747/விசாரணை/E/2023
(4) SA 21748/விசாரணை/E/2023 (5) SA 15005/விசாரணை/E/2024 (6) SA 12731/விசாரணை/E/2024
(7) SA 16462/விசாரணை/E/2024 (8) SA 9563/விசாரணை/E/2024 (9) SA 12034/விசாரணை/E/2024
(10) SA 14253/விசாரணை/E/2024 (11) SA 1829/விசாரணை/E/2025 (12) SA 5614/விசாரணை/E/2025
(13) SA 17026/விசாரணை/E/2025 (14) CP 734/விசாரணை/E/2023 (15) SA 651/விசாரணை/E/2023
(16) CP 1159/விசாரணை/E/2023 (17) SA 17322/விசாரணை/E/2023 (18) SA 20867/விசாரணை/E/2023
(19) CP 4027/விசாரணை/E/2023 (20) SA 7273/விசாரணை/E/2024 (21) SA 6998/விசாரணை/E/2024
(22) SA 16463/விசாரணை/E/2024 (23) SA 21746/விசாரணை/E/2023 (24) 4202/விசாரணை/E/2024
(25) SA 146/விசாரணை/E/2024

பெறுநர்

பொதுத் தகவல் அலுவலர்/
நிர்வாக அலுவலர்,
மாவட்ட சுகாதார அலுவலகம்,
திருவாரூர் மாவட்டம்

பொதுத் தகவல் அலுவலர்/
நிர்வாக அலுவலர்,
மாவட்ட சுகாதார அலுவலகம்,
கடலூர் மாவட்டம்

திரு. பா.சீனிவாசன்
த/பெ திரு கே.எஸ்.பாலசுப்பிரமணியம்
எண்.2/248-2, கோவிந்தராஜா கோவில் தெரு.
பசுபதி கோவில் அஞ்சல் - 614 206
பாபநாசம் தாலுக்கா
தஞ்சாவூர் மாவட்டம்

திரு கோ.சரவணன்
த.பெ திரு கோவிந்தராஜன்
எண்.2/248-2, கோவிந்தராஜா கோவில் தெரு.
பசுபதி கோவில் அஞ்சல் - 614 206
பாபநாசம் தாலுக்கா
தஞ்சாவூர் மாவட்டம்

Copy to File
CR/PA